284

சுயமரியாதை வாழ்வே! சுதந்திர வாழ்வு!!

# சுயமரியாதைப் பாடல்கள்.

OFFICE OF THE REGISTRAR ...
No.
2 MAR 1929
MADRAS

இஃது

திரு. குமரவேலால்

எழுதப்பட்டு

திரு. பி. ஜெகநாத முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது.


---

1929.

இதன் விலை அணா 2.

... நாட்டுப்பந்தலிலும் சென்னை
... "திராவிடன்" ஆபீசிலும்

O-,1x
N29
77621



நமது மாபெருந் தலைவர்

சர். தியாகராய வள்ளல்

சுயமரியாதை வாழ்வே!   சுதந்திர வாழ்வு!!

# சுயமரியாதைப் பாடல்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
2 MAR 1929
MADRAS

இஃது

திரு. குமரவேலால்


எழுதப்பட்டு

திரு. பி. ஜெகநாத முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டது.

1929.

இதன் விலை அணா 2.



சுயமரியாதை தலைவர்

வைக்கம் வீரர் ஈ. வே. ராமசாமி நாயக்கர்.


77621

# நூன் முகம்.

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும், எத்தகைய இயக்கங்கட் கெனினும், மூன்று இன்றியமையாத கருவிகளாய் அமைந்து கிடத்தலின், நம் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்புவான், திரு: குமரவேல் செந்தமிழ்ச் சுவை பொழுக, செவியுற்றார், மன்னித்தார், இசைத் தார்க்கு ஆங்கெ நம்மியக்கத்தில் அளவற்ற ஊக்கம் விளையாநிற்க, வரைந்துள்ள இன்னிசைப் பாக்கள் இன்னிலத்தில் என்ஞான்றும் மின்னியொழியாது நிலவுதல் பெறுமென்று கருதுகின்றனம்.

சென்னை, கனக சங்கர கண்ணப்பர்,

(14—2—29.) திராவிடனாசிரியர்.



கார்ப்பொரேஷன் தலைவர்

திரு. A. ராமசாமி முதலியார்.

சுயமரியாதைப் பாவலர் திரு. வெங்கடசாமி ரெட்டியார்
அவர்களால் பாடப்பட்டது.

## இரட்டையாசிரிய விருத்தம்.

மனிதரெல்லாருமொரு சாதியே யென்கின்ற வாசகம் பரவவேண்டும்
மனிதரிற் பல சாதிபேதங்களின்றியே மனமொத்து வாழவேண்டும்
மனிதரறிவிற்கு மன்பிற்கு மரியாதைக்கும் மாச்சரியமே செய்திடும்
மதமொடு புராணங்கள் செல்வச்செருக்குகளும் மாறிநலமாக வேண்டும்
அநியாயமான தீண்டாமையினுடன் கிட்ட அணுகாமை ! நீங்கவேண்டும்
அறிவுடையரெல்லா முமுடையரறி வில்லாரென் ! உடையராயினுமிலாரென்
றுதிப்பறைக்குலத் திருவள்ளுவன் சொன்ன அமுதமொழி தழையவேண்டும்
ஆண்மக்கள் பெண்மக்கள் தமையடிமைகொள்கின்ற ஆதிக்க மொழியவேண்டும்
புனிதமாகிய சுத்தவணவை யெவர்தரினுமன் புடனுண்டு மகிழவேண்டும்
புனலுதவு கிணறுகுளம் மக்கள்யாவர்க்குமே பொதுவாயிருக்கவேண்டும்
பொலிகடவுளாலயங்களில் யாவருஞ்சென்று போற்றுமாறமையவேண்டும்

பூசாரிதரகரில்லாமலே கடவுளைப் போற்றினால் போற்றவேண்டும்
நனிமமதைகொண்டுமேற் சாதிகீழ்சாதியெனும் நாற்றத்தை மாற்றவேண்டும்
ஞாலத்தில் மக்களே தெய்வங்களெனநம்பி நற்றொண்டு புரியவேண்டும்
நாட்டிலேழைச்சிறுவர் சிறுமியர் கல்விகள்கற்று ஞானமுற்றோங்கவேண்டும்
பாலருணவின்றிப் பசித்தழுது வாடிடப் பாழான கல்லினுக்கு
பால்பழம் பஞ்சாமிர்தாபிஷேகம்புரி பழக்கங்க ளொழியவேண்டும்
பாரிலேழையர் கட்டிடத் துணியிலாதிடர்ப் பட்டிடக்கற்களுக்குப்
பட்டாடையிட்டழகு பார்க்கின்ற முட்டாள் பயித்தியந் தீரவேண்டும்
சீளமுள ஏழையர் தமைக்கண்டு நாய்கள்போல் சீறிவிழலொழியவேண்டும்
செத்தவர்க்காய்புரோகிதர்களுக்குத்திதிசெய் தெளிவின்மை அகலவேண்டும்
சிந்தையினி லொன்றும் வெளியொன்றுமாய்ப்பேசிடுந்தேசீயமொழியவேண்டும்
காலமெல்லாம் நல்லகாலமே யெனுமுண்மை கண்டுதொழில் புரியவேண்டும்
கரிநாளிராகுநாள் நல்லநாள் தீயநாள் கட்டழிந்தோடவேண்டும்
கடவுட்கெனச்செலவிடும் பொருளை மக்களின் கல்விக்கு மாற்றவேண்டும்
காசினியிலேழையர்கள் தமையடிமை கொண்டுநலி கபடங்க ளொழியவேண்டும்
ஞாலமெல்லாமுமொற்றுமையுற்றுமக்கள் நம்பிக்கையுடன் வாழவேண்டும்
நாட்டேழையர்க்குச்செய்தொண்டையே கடவுள்நற்றொண்டென்று தெளியவேண்[டும்]
நலிவுறும் விதவைகளெலா மறுமணஞ்செய்து நன்றாக வாழவேண்டும்
நமதுவைக்கம்வீர மெய்க்குருவினன் புமதம் நாளுமோங்கிடவேண்டுமே

சுயமரியாதை வாழ்வே சுதந்திர வாழ்வு.

# சுயமரியாதைப் பாடல்கள்.

(காந்திமகான் வாக்கு மெட்டு.)

குடியரசின் வாக்கு—இதை
கொள்வதே செல்வாக்கு (குடி)

முடியரசை யன்னியர்க்கே முடியும்படி யடிமை கொண்ட
படியரிசிப்பார்ப்பனர் சொல்படியெல்லாங் கூத்தாடுகின்ற

பழமை வழக்கம் ஏனோ—சுய
உரிமை யிழக்கத்தானோ (குடி)

தரைமீதுதெய்வங்களே தரகர்வைத்து பொருள்பறித்தால்
அரைவயிறு ஏழைமக்கள் அடையுங்கதி அடிமையன்றோ

ஐயோ என்னகாலம்—அந்த
ஆரியர் செய்கோலம் (குடி)

பெண்டாட்டி பிள்ளையுள்ள பெரியகோவில் உருவங்களை
பண்டுதொட்டு நாம்பணிந்து பாடுபட்டும் கேடுகெட்டும்

பலனடைந்த தேது—நாம்
பாழ்பட்ட தல்லாது (குடி)

விபசார விடுதியைப்போல் விளங்கும் நம்கோவிலுக்குள்
உபசாரக்கடவுளங்கு உரைந்திருப்ப துண்மையாமோ

உணரு வீரிப்போதே—நம்
உரிமையும் தப்பாதே (குடி)

தீராதநோய்க்கிடமாம் தீயநாற்றக் குளத்துத்தண்ணீர்
தீர்த்தமென்றுகுடித்து நோயைத்தீர்க்க மருந்துதேடுவதே

தெரிந்துமதியை யிழந்தோம்—உயிர் [ன்
வருந்தும்வழியில் நுழைந்தோம் (குடி)

பொங்கலிட்டு பூசைபோட்டு பொருளனைத்தும் போகவிட
சங்கையற்று சாமிமுன்னே தலைவிரித்து ஓலமிட்டால் [டு

சகலசொத்தும் வருமோ—நம்
தரித்திரம்தா னறுமோ (குடி)

வடமொழியன்றிவேறு வார்த்தையறியாக் கடவுள்
திடந்தமிழ்மொழியில் நம்மைத்தேற்றுவது மெங்கனமோ

திருட்டுத்தன மிதன்றோ—வேத
புரட்டைப்போல் வேறுண்டோ (குடி)

காசிழந்தும் கால்பிடித்தும் கண்டகண்ட பார்ப்பான்நம்மை
வேசிமகன் என்றழைக்க வெட்கமேனோ நமக்கில்லையோ

விலகிடாத தாழ்வு—அறில்
நிலவுமே சுயவாழ்வு (குடி)

சாதியென்றும் சமயமென்றும்தன்னலத்தை எண்ணியன்றோ
ஆதியிலே செய்துநம்மை ஆரியர்கள் அடிமைகொண்டால்

ஆகமம்பொய் பேச்சே—இதன்
அகப்பொருள் வெளியாச்சே (குடி)

அம்மாவாசைதிவசங்களில் அந்தணர்குப்பூசை போட்டால்
ஆட்டவரும் மாண்டவரும் வேண்டிவந்து விருந்துண்பா

அதிலிழக்கும் பொருளோ—ஏழை [ரோ
அரும்பசிக்கு அருளே (குடி)

தள்ளாதகிழவனுக்கும் தையல்மீது மையலுண்டேன்
நல்ல சிறுமிகளை நாம் பழிக்க நீதமுண்டோ

நாயகன் தன்னையிழந்து—பெண்கள்
நாளுமூலையி லொளிந்து (குடி)

கள்ளத்தனமாகக் கைப்பெண் கணவன் வேறுவைத்துக்
[கொண்டு
பிள்ளைப்பெற்றும் கருவழித்தும் பின்புயிரை மாய்த்துக்

பெரும் இழுக்கும் நமக்கே—இனி [கொள்ளும்
மறுமணத்தை யியக்கே (குடி)

பெருநலத்தை பார்ப்பானுக்குக்கே பெருகும்படி செய்து [கொண்ட
ஒருகுலத்துக் கொருநீதி உலகமதில் கண்டதுண்டோ

உரிமைதனை நீக்கும்—நம்
பெருமைதனைப் போக்கும் (குடி)

மனுசொன்னநீதிகளில் மயங்கிமனம் தளரவேண்டாம்
இனிசுயமரியாதை என்னும் இயக்சமதே நமக்கு நீதி

இதைக்கடைப் பிடித்திடுவோம்—வேத
கதைப்படிப்பதை விடுவோம் (குடி)

இரக்கமுள்ள திராவிடரை அரக்கரென எழுதிவைத்த
குருட்டுப்புராணங்களின் குட்டுவெளியானதினால்

குணமுடனே நேசி—நம்
குடியரசை வாசி (குடி)

(பாரினிலேபுகழ் பாரத புத்திரரே மெட்டு.)

(பல்லவி.)

பார்ப்பனரல்லாத பாரத பாலர்களே—தேச
பக்த சீலர்களே

(அநுபல்லவி)

ஆர்ப்பது வீண்கடன் ஆற்ற நமக்குண்டு
ஆற்றல் என்றே மனம் தேற்றி நின்றுழைப்போம்(பார்)

(தொகையறு.)

தெட்சணையில் பலகோடி, திவசங்களில் பலகோடி,
தினந்தோறும், திருட்டுப்பார்ப்பான்,
நிச்சயித்தபடியெல்லாம், நம்மூதாக்காள் சொத்தை,
நீர்வார்த்து, கொடுத்தார்போல,
இச்சகத்தில்நாம், பிறந்ததற்கும் இறந்ததற்கும்
வாழ்ந்ததற்கும், இதுவென்னநீதியிவர்,
அச்சமின்றி பொருள்பறித்து, மேலும் நம்மை
அடிமை என்றே, மதித்து அகற்றுகின்றார்.

(பாட்டு.)

ஆரியர் ஆதிக்கம் மீறுது இத்தினமே—இத
கற்றய தினமே

வேரற நாமிதை வெட்டி சுயம்பெற
வீரசிங்கங்களே வாருங்கள் வாருங்கள் (பார்)

(வேலா நீயேகதி மெட்டு.)

யாரை கேழ்பது—மெய்
போரை செய்வ தேயல்லாது (யாரை)

நமது நாட்டில் தருமமேது
நரகமும் இது வேயல்லாது
சம உரிமை உண்டோ ஓது
சாத்திரப் பேயும் போகாது (யாரை)

நீதியுல்லா வேத மோடு
விருதர் ஆளும் பரதநாடு
ஆதிமக்கள் செய்த கேடு
ஆற்றும் ஆற்றலும் நம்மோடு (யாரை)

சாதிபேத தகையை மாட்டி
சமரசத்தைத் தானய் காட்டி
சோதில் குடியரசை நாட்டி
கோண்முயான வாழ்வை யோட்ட (யாரை)

காங்கிரசும் கைவிட்டாச்சு
கல்கத்தாவிலும் வாய்பேச்சு
தூங்கி யிருந்த நாளும் போச்சு
சோதர்கள் நாம் துணியலாச்சு (யாரை)

("கண்ணபிரான் என்ன வேயிக்" மெட்டு.)

அந்தணரல்லாத நாமும் அடிமையாகலாமோ
அதன்—கொடுமையும் வீண்போமோ
ஆரியர்கள்—செய்யும் அநியாயம் சரியாமோ (அந்)

எத்தனையோ கோடிபேர் நாமிருந்தும் பலன் எதுவோ
நாம்—வருந்தும் நிலையிதுவே
இந்த ஏழையர் படுந்துயரம் ஈசனுக்கும் பொதுவோ

பிள்ளைப்பெரும் கருவியைப்போல் பெண்களை மதிக்கின்
அவரை—கண் கலங்கவிண்டோம் [றோம்
நாம்-உள்ளபடி சொன்னால் வேதம் உரைக்கும் நீதி
[என்போம் (அங்)

கணவன் சொத்து பெண்சளந்தோ கலங்குகின்றார் கோடி
இதை—கருத்ததனில் சூடி
மறு-மணம்புரியசெய்வோம் அவர் மனத்துயரைநாடி
குடியரசும் திராவிடனும் கூறும் மதியைக்கேட்டு
நம் கூட்டுறவைக் கூட்டு
நம்—குலதெய்யமாம் பனகால் மன்னன் கொடிய
தனை நாட்டு (அங்)

நாயக்கரின் திருவாக்கு நயமறிந்து கேழ்ப்போம்
இனி—ஜெயம்பெறவே யுழைப்போம் [போம்
இந்து—நாடறிந்த இயக்கமதில் நம்முயிரை மாய்ப்

காங்கிரசிரங்கி நம்மை கார்க்கும் நாளுமேதோ
மன—ஊக்கமும் வராதோ
சென்னை-கண்ணப்பரின் சொற்பெழிவு கருத்தை
[யுருக்காதோ (அங்)

சுயமரியாதை பெறில் சுதந்திரமே தங்கும்
இந்த—சொல்முழங்குதெங்கும்
நம்சு—ரேந்திரநாத் ஆரியாவின் துணுகரப்பிரசங்கம்()

தியாக மூர்த்திபன கல்மன்னன் தருமமான வாக்கு
இதை—தயவுடனே நோக்கு
அவர்—தரணிவிட்டகன்றாரென தயங்குவதும் எதற்கு

கண்ணிழந்தாற்போல நம்மை கலங்கச்செய்த கோவே
ஜெய—முழங்கின்றதேவே
விண்ணடைந்தும் நம்மைவேண்டிக்கொள்வதுமிதுவே

தியாகராயர் நாயர் கோமான் தன்னுடன் கலந்து
அவர்கள்—எண்ணவு மறிந்து
இன்னும்-தயவுடனே நம்மைக்காக்க புவிவருவார் பிறந்து

(நாதந்தி நாதந்தி நாதந்தி மெட்டு.)

பாட்டாக்கள் செய்தபொய் எட்டையெல்லாம் சுட்டு
நாட்டுவோம் நம் சுயமே—இதுதான்
நாட்டுக் கினிஜெயமே.

தீண்டாமை என்னும் ஒர் வேண்டாதகொள்கைநம்
மாண்டவர்க்கும் மாக்ஷியோ—இதற்கு
ஆண்டவரும் சாக்ஷியோ.

என்னென்ன தண்டனைமுன்னம் மநுசொன்னர்
தன்னலந்தன்னை எண்ணி—அதைநாம்
என்நாளும் பூசைபண்ணி.

அந்தணனைக்கண்டு பணிந்துதெண்டனிட்டு அடிமை
பட்டம் வாங்கவோ—அந்த
கொடுமை இன்னும் தாங்கவோ.

கல்லைதெய்வமென்று பல்லைக்காட்டி நின்று
கைகுவித்துகொள் வதே—அதனில்
மெய்தவிப்பும்கொள்வதேன்.

தொட்டால் உடன் சுத்தம் விட்டேகும் சூத்திரா
எட்டிப்போ என்றகற்ற—அந்தோ
இதைமுற்றும் நாம்பொறுக்க.

நாமே நமக்குத்தலைமை என்றகொள்கை
யாமேசுய நிலைமை—இதுவே
நாய்க்கரின் வலிமை.

(நாதவிந்துகலாதி நமோநமோ மெட்டு.)

ஆதிசெந்தமிழ் ஒதுமன்பர்கள்
ஆரியர்கொடும் ஆக்ஷியால்வந்த
சாதிபந்தனம் தீதறிந்திதை—தவிர்ப்போமே.

நீதியே துமிலாது வேதமேல்
நீடும்பக்தி கொண்டாடுவமதென்
ஏதும்புத்தி யிலாதிருப்பதும்—இழிவன்றோ.

நாமேசுய மரியாதையில்மன
பான்மைகொண்டுழை மேன்மையுண்டிதில்
ஆண்மைகொள்ளுவோம் தாழ்மைவெல்லுவோம்—
[அறிவீரே.

மாதரோடுநம் மாக்கள்செய்கின்ற
பாதசந்தன்னை பகரவொண்ணாது
ஆதரவினி நாமேயல்லாது—அவர்சாரு.

ஏழையர்சுயம் வாழ்வதற்கென
ஆழமாமருளா றுழைக்குமெய்
தோளராம்வைக்கம் வீரநாயக்கர்—சிரம்வாழி.

ஞான உம்மெய் ஞானதேசாபி
மான உன் உருவானமங்கள
பானகல்மன்னன் பாதமலரினை—பணிவோமே.

இராகம் தன்னியாசி

''கனகசபாபதி தெரிசனம்'' மெட்டு.

சுயமரியாதையிலாது மண் மீது
சுதந்திரம் நமக்கேது— (சுய)

பயமறமேயோப கர்ந்ததின படியா
பாசங்கள் நிறைந்த நம்தேசமுன்வருமோ (சுய)

யிர்க்குள் உயர்வுதாழ்வுஉண்டென்பதுவும் நன்றோ
ரம்உடற்கட்டிவை உண்மையில் பேதமுண்டோ
ற்கையில் சாதிஎன்பதிரண்டன்றி வேறுண்டோ
தயின்று முணராதிருப்பதிழுக்கன்றோ (சுய)

யாரியர்சொன்ன மூட்டைபொய் கதைகளில்
ம்பிக்கைகொண்டால் மோட்சம்கிடைக்குமா
ரம்சொல்லிநம்மை மயக்கிபொருள்பறிக்கும்
கொள்ளை கிணங்கிமதியிழந்தோம் (சுய)

தருகின்றவழியில்லை தாமெல்லாம் ஏற்றுக்கொள்வார்
தரைமீதுஇவரைபோல தன்னலவாதிகளிர்
எரிகின்றவீட்டில் சென்றெடுத்தது லாபமென்று
எண்ணிக்கொண்டிருப் பவர்க்கென்ன சுதந்திரம் (சுய)

கெழ்பதால் மயிலிறகுகிடைக்க வழியுண்டோ
கிணற்றுதண்ணீர் அழைத்தால்கிளம்பி வருவதுண்டோ
பார்ப்பன கிலிக்குநாம்பயந்தால் பலனுண்டோ
பாரெல்லாம் நம்மைப்பார்த்து பரிகாசிக்குதன்றோ (சுய)

இந்தியகாங்கிரசில் இவர்க்கென்ன உரிமை
இதன்பெயரால் இவரிங்குசெய்வதே கொடுமை
புந்திசிறப்பவேறு புகலில்லாது புளுகும்
பூணூல்பாக்கியம் பொது நலமாமோ (சுய)

பிறக்குமுன்பார்ப்பானுக்கே பிறக்குதுகாணிக்கை
பின்புயிர்வாழ்வதிலே பெருகுதேகாணிக்கை
இறக்குமுன்பின்னுமிவர்க் கிருக்குதேகாணிக்கை
என்னென்ன காணிக்கையோ ஏழைமனந்தவிக்க (சுய)

மறுமணம் முடிக்காதமாதர்கள் கோடி
மங்கயரழிக்கின்றசிசுக்களுங் கோடி
சிறுவயது மணத்தால்தீவினை கோடி
தெரிந்துநாமுழைப்போம் ஜெயந்தனை நாடி (சுய).

(ஆபோம்பே மேட்டு.)

அஞ்ஞாதீர்கள் மனந்துஞ்சாதீர்கள்—நாம்
ஆரியர்கடிமையாய் கெஞ்சாதீர்க்கள் (அ

பஞ்சகம் சூதுவாது வன்கொடுமையும்
வையகந்தன்னில் நின்றுனைய ஒழித்து
தஞ்சமற்ற ஏழைமக்கள் தனக்கிரங்கி
தனிநிலையவர்பெற இனியுழைப்போம் (

மண்டிபோட்டு தெண்டனிட இழுக்கில்லையோ
மனிதரென்ற மதிப்பும் நமக்கில்லையோ
அண்டமதம் இதைக்கண்டு நகைக்கலையோ
அந்தோநா மிதையின்னும் உணரவில்லையோ

முக்கியம் கல்விதன்னை கடைப்பிடித்து அவர்
முனிசிபல் லேட்டிலும் நின்றுபடித்து
அக்கிராகாரத்திலே வயிர்வளர்த்து
அவர்முன்னடைகின்றார் நம்மைவிடுத்து (அஞ்)

உத்தியோகம்யாவும் அவர்பறித்துக்கொண்டார்
சுயஉரிமையிழந்து நம்மைதவிக்க விண்டார்
எத்தொழிலும் வெட்கமின்றி யேற்றிச்செய்கின்றார்
இதைக்கண்டன் ரோமேயோ எழுதுகின்றார் (அஞ்)

தர்ப்பைப்புல்லை துப்பாக்கிபோல் கண்டுபயந்து
திருட்டுப் புரோகிதரை கெஞ்சிநயந்து
இப்புவியில்தெய்வங்களும் அவர்களென்று
இரைத்தபொருளுக்கொரு எல்லையுமன்று (அஞ்)

(ஸ்ரீராகம் தாளம் - ஆதி)

(பல்லவி)

வீரசிங்கங்காள் வருவீர்—வைக்கம்
வீரநாயக்கர் மெய்போருக்குத் துணைநிற்க (வீர)
வேற்றுமையற்ற நம் ஆற்றலை ஆற்றிட (வீர)
வித்தியாசமற்ற புத்தியுற்றநம் ஆற்றலை ஆற்றிட (வீர)
விரத வரத பரத சுகிர்த
வினையகுணமணி பனகல்கொடி நிழலில் (வீர)

(அநுபல்லவி.)

பாரெங்குமே முழங்கும் படிஜெய முறசிது
குடியரசழைக்குது (வீர)

நீதியில்லா வேதம் ஓதும் புரோகிதத்தை
நீராய் எரித்து உண்மை சீரைநிலைநாட்டிநம்மை

நிறுதற்கொடுமையில் விடுதலை படும்படி
நீக்கமற்ற உயர் நோக்கமுற்ற ஜெய (வீர)

77621

சான்றோராயிருந்தநம் ஆன்றோரையரக்கரென
சாற்றும் சரித்திரத்தை ஆற்றில் ஒழுகவிட்டு

சாதிபேத மதயானையைக் கொல்லுவோம்
சமரசமெனும் உயர்தனி நிலைபெரும்படி (வீர)

கோடானகோடி மக்கள் கொள்ளும் மூடவழக்கம்
கூடாதென்ருல் வேதம்கூறுதே என்றுரைத்து
குரைத்த நாய்களைக் கொன்றிடச் செய்குவோம்
துரைத்தனத்தாருடன் துணிந்து போராடுவோம் ()

'ஓங்கிவளரும் நமதுண்மை யியக்கந்தனில்
தூங்கியிருந்தே மாந்து ஏங்கி மனந்தாளாது
சயமரியாதையின் ஜெயக்கொடி யேந்தியே
சுபதினமிதுவென மிக துணிவுடன் ததி (வீர)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

முத்துக்குமரையனே மேட்டு

பல்லவி.

வைக்கம் வீரர்நாயக்கர்
வாழ்க—வாழ்க—வாழ்க (வை)

அநுபல்லவி.

திக்கெலாம்புகழ் மிக்கநின்றிவர்
தேசசேவையாடி—உண்மை நேசபார்வைகூடி
கை கூடி (வை)

கொஞ்சமேனும்புவி வஞ்சராட்சியில்
அஞ்சிடாப்பிரசங்கம்-செய்யும்துஞ்சிடாத அங்கம்
ஜெயசிங்கம் (வை)

உண்மைதனை ஒருபோதுமொளியா
துரைக்கும் தேசபக்தன்—அருள்பெருக்கும் ஞான
சித்தன் பிரசித்தன் (வை)

மங்கையர்படும் சங்கடந்தனை
மனதில்கொண்டு யேங்கி—மறுமணத்திற்கேயிரங்கி
யிணங்கி (வை)

ரீவோல்டு குடியரசை நாட்டிநம்மிருளை
யாற்றுமவதாரன்—நம்மைபோற்றவந்ததீரன்
உதாரன் (வை)

(பாரதமாதா பெற்ற மெட்டு.)

செந்தமிழ் நாடுறையும் செல்வ சகோதரரே
தந்தைபோல் நமக்குழைத்த தருமபுண்யபனகல் மன்னர்

தலைவருமகன்றாரே—ஞான
திலகரும் மறைந்தாரே (செந்)

நம்நாட்டு மருத்துவத்தை நலம்பெறவே நாட்டினவர்
எம்மட்டோ பாடுபட்டு ஏழையரை யாற்றினவர்

இருந்ததும் நமக்கே—அவர்
இறந்ததும் நமக்கே (செந்)

பாருலகம் ஏசுகின்ற பழய பலபழக்கங்களை
வேரறுக்க வேண்டுமென்று விருதுகொடி யேந்தி எங்கும்

விளம்பினார் பிரசங்கம்—அந்த
வீரகங்கண சிங்கம் (செந்)

அரசியல் அமைச்சராகி அவர்செய்த அரியநன்மை
அளவிடுதல் அரிதரிது அவனிபுகழ் அரசரவர்

அருமை உயிரும் போச்சே—நாம்
அவதிப்படவும் ஆச்சே (செந்)

பெண்களுக்குசம உரிமைபெருக நின்றுழைத்தார் மன்னன்
கண்கொடுத்தார் கர்ணரென கையெடுப்பார் காண்பரெல்லாம்

கார்க்குங் குலதெய்வம்—இவர்
பேர்க்கே மாரிபெய்யும் (செந்)

சாதிக்கட்டு சமயக்கட்டு சனிகளெல்லாம் தூரத்திவிட்டு
நீதிநட்டு நமது நாட்டை நிறம்பச்செய்யும் நாயக்கரின்

நீக்கமற்ற நண்பர்—உபர்
நோக்கமுற்ற அன்பர் (செந்)

திராவிடனுக்குயிரளித்த தருமரிவரல்லவோ
பூவிடத்தில் இவரைப்போல பூபன் உண்டோ புகலுதற்கு

பொது நலத்துக் குழைத்தார்—அந்த
புனிதனெங்கோ ஒளித்தார் (செந்)

மாணவர்க்கு உதவிநின்றார் மருத்துவர்க்கு மகிமையீந்தார்
ஆணுவத்திலே மிகுந்தார் அரசகோனாய் அவதரித்தார்

அழகு மங்கள தேகம்—என்பார்
அதற்கில்லை சந்தேகம் (செந்)

அறுபதுவயதிற்குமேல் ஆனதெனயார் புகல்வார்
இறுதியிலும் இளைப்பறியா இளவயதாய் அவர்இருந்தார்

எமனுங்கண்டு அஞ்சும்—படி
இருந்ததே அவர்நெஞ்சம் (செந்)

பொல்லாதபார்ப் பனியபொம்மலாட்ட கூத்தையெல்லாம்
செல்லாமல் கொய்துபலசீர்திருத்தம் செய்தகோவின்

திறமைசொல்லுவதாகா—அவர்
முறைமையும் வீண்போகா

அஞ்சாதுதுரைத்தனத்தார் அறியவேண்டும் புத்திசொல்லி
துஞ்சாதுநம்மைக் காத்ததுய்மை ஞானகருணைவேலி

துரிதமாய்ப்பிரிந்தார்—நம்மை
துயரினிலெரிந்தார்

பாயாரக்கிடந்ததில்லை பலபேரும் அறிந்ததில்லை
பனகல்கோண்இறந்தாரென பகரயாரும்நம்பவில்லை

பாழுங்கோடையிடியே—நம்மை
பதரச்செய்த படியே (செந்)

மன்னன் மடிந்த சேதிமக்கள் கேட்டு மனந்துடித்தார்
என்செய்வோம் என்றலரி ஏங்கலுற்றார் யாவருமே

இதுவும் என்ன காலம்—அந்த
ஈசன் செய்த கோலம் (செந்)

அருமை உயிர்போன பின்பும் அவர் முகத்தின் அழகைக் [கண்டு
அயர்ந்து துயில்கின்றாரென அஞ்சிகின்றார் அனைவருமே
அலரிக்கண்ணீர் வடித்தார்—நெஞ்சம்
அவரை எண்ணித்துடித்தார் (செந்)

தமிழ்நாட்டுமக்களுக்கு தஞ்சம்வேறு இல்லை என
தலைவிரித்து ஓலமிட்டு தயங்கலானோம் அந்தோ இதை
சகிப்பதெப்படியோ—ஈசன்
வகுத்ததிப்படியோ (செந்)

மண்ணுலகில் இல்லையென மனந்தளர வேண்டாமவர்
விண்ணுலகிருந்துநம்மை வேண்டிவாழ்த்தி வரமளிப்பார்
விரதங்கொண்டே எழுவோம்—அந்த
வரதன் பெயரைத்தொழுவோம் (செந்)

சுயராஜ்யம் அதிகதூர மெட்டு.

பனகாலரசரவர் பாரைவிட்ட கன்றதை
நினைக்கநினைக்க அந்தோநீறுதேநெஞ்சம்
துணைக்கும் குணமிகுந்து தோன்றின தோழன்
தூயமகானவர் தீனதயாளன் (பன)

(தோகையரு)

துயரானநம்தேய துரைத்தனத் தோடு
துணிந்துபோர் செய்தவீரன்
உயர்வானபல நன்மைநமக்கெனச்செய்த
உதாரகுணகம்பீரன்,

பாட்டு

இந்தியமருத்துவமாகல்விச்சாலை
இங்குறப்பெற்றதேயிவர்செய்தவேலை
முந்திஆரியர்கொண்ட மூடவழக்கங்களை
நந்தேயத்திலழிய நாட்டினார் நன்மைகளை

(தோகையரு)

சாதிவிரோதமற்ற சமநிலைசார்பாயுழைத்த
சம்பன்னஞானசீலன்
ஆதிதிராவிடரின் அரியநண்பராய்
அவதரித்த அனுகூலன்.

(பாட்டு)

மண்ணுள்ளபார்ப்பனிய மாயக்கொடுமையினில்
எண்ணுக்கடங்காமக்கள் ஏங்குகின்றாரென
விண்ணவரிடம் சென்றுவேண்டிமுறை யிடவோ
எண்ணிமடிந்தனரோ ஏழைபங்காளன்

(தோகையரு)

நல்லார்க்குப்பெய் மாரியெல்லார்குமாமென்ற
ஞாயம் போல
எல்லார்க்கும் பொதுநின்றே இரங்கினர்
இவர்தெய்வம் போல.

பாட்டு.

பிறர்க்கென இருந்த அந்தபெரியாரைப் பிரிந்தோம்
மறக்கமுடியா திந்தமண்ணுள்ள காலே
அடுக்களைச்செல்வம் என்று அகற்றும்நம் பெண்களுக்கு
அடைக்கலம் நின்றிவர் அளித்தனரே. (பண)

பஞ்சாப் படுகோலை மெட்டு.

இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி.

நெஞ்சாருதில்லையே—என்செய்வோம்
ஏழை எங்கள் (நெஞ்)

அஞ்சாபனகல்மன்னு அந்தோமடிந்ததென்ன (நெஞ்)

நமக்கடக்கலமது கொடுத்துறும்துயர்
விடுத்திடப் போர்தொடுத்தலும் நீர் (நெஞ்)

தேசத்தில் மிகநேசத்தில் விசுவாசத்தில்
நீர்மாசற்றவரோ (நெஞ்)

ஏழைமக்கள்சுபம் வாழ்வதற்கென
ஆழமிக்கருளாலுழைத்தனை (நெஞ்)

இங்குனக்கிடம் எங்குமில்லையோ
எங்கள்மன்னர் நீர் எங்குசென்றனை (நெஞ்)

சாதிவேற்றுமை ஏதுமற்றுமெய் நீதி
பற்றி ஓயாதுழைத்தனை (நெஞ்)

அந்தோ என அலரிக்கதறும் நம்
தேயத்துய ராற்றுவதாரினி (நெஞ்)

சரணம்.

வஞ்சகம் சூதுவாது வன்கொடுமை தாங்கினேய்
வார்த்தையா லுழைத்தவர்க் குதாரணத்தையாக்கினேய்
நஞ்செயத்தை நாடி அன்றேநல்லுயிரும் போக்கினேய்
நாடெங்கும் ஓடுதேகண்ணீர் தாரை
நின்னை நம்பி ஆரம்பித்தோம் எங்கள் போரை
நீவிர் தேடரும் தலைவரகன்றீரே
தெரிந்தெடுப்பதாரை
திகைக்குதுள்ளம் நேரே (நெஞ்)

ஐயாபழனிமலை வேலா மெட்டு.

(இராகம் சகாஞ தாளம் ஆதி)

பொன்னுன பனகல்மன்னவா—ஞான
பூரணபாரத புதல்வா
கண்ணுன எங்களைக்காவா—நின்னை
காத்திருப்போம் எதிர்வாவ (பொன்)

தங்கஉயிரிழந்ததேது—இதை
தாங்க எமக்குமுடியாது
எங்கேநீர்சென்றீரிப்போது—என
எங்குதன்றே எங்கள்மனது (பொன்)

ஐயோஇதுவும் நம்விதியோ—அதை
ஆண்டவன்செய்கின்ற சதியோ

வய்யம்புகழும் பூபதியே—நம்மை
வருந்த விட்டகன்றதும் நீதியோ (பொன்)

கல்லோமனங் கரையாதோ —இது
காறுமிரங்கினதும் சூதோ
எல்லாரும் கதறக்கேளாதோ—மன்னு
ஏழை எங்கள்மேல்வாதோ (பொன்)

சற்றேயெழுந்தருள்வீரா—எங்கள்
தகையெலாம் நீர்கேழ்ப்பீரே
பெற்றோர்போல் நீர் இருந்தீரே—ஏனோ
பேசாமல்துயில் கின்றீரே (பொன்)

காசினியெங்கும் கண்ணீர்தங்க—சென்னை
கடலூறும் அலைகளும்பொங்க
தேசுறும் கதிரவன்மங்க—அந்த
தீனதயாபரனும் தூங்க (பொன்)

அடைக்கலமே அடைக்கலமே மெட்டு

பல்லவி

எங்ககன்றீர்! எங்ககன்றீர்!!
எம்பெருந்தலைவரே இனிவருவீரோ—எங்

அநுபல்லவி

எங்கடன் எனநீர் எங்களை ஆற்றினீர்
இங்கிடமில்லையென்றோபொன்உயிர்மாற்றினீர் (எங்)

சரணம்.

நின் அங்கத்திடமதை கண்டாறுதலடைந்தோம்
அருந்தவப்பயன்யென அகமகிழ்ந்திருந்தோம்
எங்களுக்கேதுகுறை என உணர்ந்தெழுந்தோம்
எல்லா எண்ணமும் நடாற்றினி விழுந்தோம் (எங்)

இந்தியமருத்துவம் எழும்பிடச்செய்தோய்
எவருக்கும் சமனில்லை இதம்பெறசெய்தோய்
நந்தேயம் நலம்பெற நன்மைமழையைப்பெய்தோய்
நாளும் எங்களுக்கு நீசதம் ஈய்ந்தோம் (எங்)

சென்னை அரசியல் அமைச்சராயிருந்தாய்
சீர்திருத்தங்கள்பல சிறந்தனபுரிந்தாய்
பொன்னைப்பொருளை ஏழைப்புந்தியில் பொழிந்தாய்
புறக்கணித்தவர் உறம் அறுக்கப் போர்புரிந்தாய் } (எவ்)

ஆரியர்செய் அனியாயம் பொல்லாது
அதை ஒழிக்கவல்லோன் நீயல்லாது
ஆருளர் அரசேபோர் முன்னணிமீது
அயர்வடையா வந்தருந்துணையில்லாது (எங்)

கனகமுகமலரைக் காண்பதும் என்றோ
கதறிடும்படி எம்மைக்கைவிடல் நன்றோ
பனகல் அரசேநின் பார்வையே அன்றோ
பார்ப்பனருக்குப்பயம் பலிக்கவேறுண்டோ (எங்)

நாளும்நின் நோக்கத்தில் நம்முயிர்மாய்ப்போம்
நாயக்கர்சொல்லுக்கு நம்செவி சாய்ப்போம்
பாழும்பார்ப்பனியப் பழக்கத்தையொழிப்போம்
பனகல்கொடி நிழலில்பற்றியே யுழைப்போம்

(சுருளிமலை மீதுலாவும் சீலா மெட்டு.)

பாரதம் புகழும் பூமி பாலன்—தேச
பற்றுதல் மிகுந்த குண சீலன்—ஏழை

பங்கிருந் திரங்கி யெங்கள் சங்கடந்
தவிர்க்கவந்த தோழன் தயாளன் (பார)

திராவிட பூமிக் கலங்காரன்—உயர்
தியாகமூர்த்தி யாகவந்த தீரன்—நம்மை

தாக்கிநின்ற தகையாவும் நீக்கிஜெயம்
பெற்றதனி வீரன் அவதாரன் (பார)

மாதவத்திலே பிறந்த மன்னன்—உயர்
மார்க்கத்தி லுழைத்த சம்பன்னன்—ஆதி

மக்கள்சாதி கொள்கைதனை நீக்கவென்றே
ஊக்கங்கொண்ட புண்யன் காருண்யன் (பார)

சென்னை மருத்துவக் கல்லூரி—அதை
சீர்திருத்தஞ் செய்யமனந் தேறி—அன்று
சீறிநின்ற கிவ்வடுடன் மீறிநின்று
போராடிய பூபன் பிரதாபன் (பார)


இந்துமத பரிபாலன சட்டம்—செய்து
இவர்பெற்றார் பெரும்புகழ் பட்டம்—பின்னும்
முந்திமுதல் மந்திரியாய் வந்தமைப பலதிட்டம்
செய்தார் நன்மை பெய்தார் (பார)

சுயமரியாதைக்கொடி நாட்டி—இந்த
சொதர்கள்நாமகா நாடுகூட்டி—இனி
பயமறவேப்பனகல் மன்னர் பகர்ந்தபடியே
போராடவருவீர்—ஜெயம்பெருவீர் (பார)

முற்றிற்று.

77621

PRINTED AT THE SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.



சுயமரியாதை வீரர்

திரு. J. S. கண்ணப்பர்.

## ஞானசூரியன்

அல்லது

# வேதத்தின் ஆபாசம்.

சுவாமி சிவானந்த சரஸ்வதியால் எழுதப்பட்டு திருவை சு. ஷண்முகம் செட்டியாரால் பதிப்பிக்கப்படட்டது.

முன் விலை ரூ. 1 0 0 இப்போதைய விலை அணா 8.

மகாநாட்டுப் பந்தலிலும், ஈரோடு குடிஅரசு புஸ்தக சாலையிலும் கிடைக்கும்.

---

## இராமாயணத்தின் ஆபாசம்

அல்லது

# இதிகாச ஆராய்ச்சி.

முதல்பாகம்

## பாலகாண்டம்.

சந்திரசேகரம் பாவலர் பெயரால் குடி அரசில் எழுதி வந்த பாலகாண்டக் கட்டுரைகள்.

இதன் விலை அணா 0 4 0

மகாநாட்டுப் பந்தலிலும், ஈரோடு குடிஅரசு புஸ்த சாலையிலும் கிடைக்கும்.